உ

சிவமயம்



மானிப்பாய் வடகிழக்கை வதிவிடமாகக் கொண்ட

## திரு தம்பிப்பிள்ளை கனகராசா

(பயிற்றப்பட்ட கணித ஆசிரியர், ஆனந்தன் வைரவர் ஆலய தர்மகர்த்தாவும்)

**அவர்களின்**

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**21-3-1998**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத் தலைவராக விளங்கி எந்தவோர் இடரும் எம்மை அணுகா வண்ணம் பேணிக் காத்து உயர்வளித்து பேரின்பப் பேற்றினை நாடிச் சென்று விட்ட எங்கள் குல தெய்வத்திற்கு இந் நூலினை வெளியிடுவது நாம் செய்யும் பிரார்த்தனைகளாக அமையும் என்று எண்ணி அவர் பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

மனைவி

மக்கள்

சகோதரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. த. கனகராசா அவர்கள்

| | |
|---|---|
| மண்ணில்: | விண்ணில்: |
| 30-10-1950 | 19-2-1998 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தோத்திரப் பாடல்கள்

## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் — உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தம்கை.

## தேவாரம்

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடையசுடலைப் பொடிபூசியென் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந் தேத்த அருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மா னிவனன்றே.

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
யுணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துட் டித்திக்குந் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
யம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கண் மெய்யடியார்கள்
விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்த பொருளள வில்லதோ
ரானந்த வெள்ளப்பொருள்
பண்டு மின்றுமென்று முள்ளபொரு ளென்றே
பல்லாண்டு கூறுதுமே.

## புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியா யுன்றன்
றிருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு
வாலிதா மின்பமா மென்று
கண்ணிலா னந்த வருவிநீர் சொரியக்
கைம்மல ருச்சிமேற் குவித்துப்
பண்ணுனா னீடி யறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

## திருப்புகழ்

அகரமுமாகி யதிபனுமாகி யதிகமுமாகி அகமாகி
அயனெனவாகி அரியெனவாகி அரனெனவாகி அவர்மேலாய்
இகரமுமாகி யெவைகளுமாகி யினிமையுமாகி வருவோனே
இருநிலமீதி லெளியனும்வாழ எனதுமுனோடி வரவேணும்
மகபதியாகி மருவும்வலாரி மகிழ்களிகூரும் வடிவோனே
வனமுறைவேட னருளிய பூஜை மகிழ்கதிர்காம முடையோனே
செககண சேகு தகுதிமி தோதி திமியென ஆடு மயிலோனே
திருமலிவான பழமுதிர் சோலை மலைமிசைமேவு பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்கமன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரத்துவ மடைந்த
# ஆசிரியரின் வாழ்வும் பணியும்

சிவபிரான் தன் தனிப்பெருங் கருணையினாலே ஒவ்வொரு ஆன்மாவுக்கும் உடல், கருவி, உலகம், நுகர்ச்சிப் பொருட்கள் ஆகியவற்றைத் தந்திருக்கிறார்.

மானிப்பாய் வடகிழக்கில் வாழ்ந்த தம்பிப்பிள்ளை இராசம்மா தம்பதிகளுக்கு சிரேஷ்ட புத்திரரான கனகராசா என்ற ஆன்மாவுக்கு சிவபிரான் உடல், கருவி, உலகம், நுகர்ச்சிப் பொருட்கள் முதலியவற்றை 1950ம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 30ந் திகதி கொடுத்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ உதவினார்.

இவருடன் உடன் பிறந்தவர்களாக இரவீந்திரராசா, யோகேஸ்வரி, இராசேஸ்வரி, ஜெகநாதன், தவராசா ஜெயராசா, சிவனேஸ்வரி என்பவர்கள் பிறந்தார்கள்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் பயின்று, உயர் கல்வியை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் பெற்றார். கல்வி கேள்விகளில் சிறப்புற்று விளங்கிய அவர் விளையாட்டு வீரராகவும் சிறப்புற்றார்.

கல்வி பயின்ற காலத்திலேயே அவர் மனிதநேய முள்ளவராக. பொதுப்பணிகளில் ஈடுபாடுள்ளவராகத் திகழ்ந்தார். அப்போது பாரதி சனசமூக நிலையச் செயலாளராகவும் கடமையாற்றினார்

ஆரம்பத்தில் அன்னாரது ஆசிரியப் பணி 10-2-72ல் அனு/பவுனுகம மகா வித்தியாலயத்தில் தொடங்கியது.

அங்கிருந்து மாற்றலாகி 1975-ம் ஆண்டில் யாழ் அச்சுவேலி விவஸ்லி வித்தியாலயத்தில் கணித ஆசிரியராகக் கடமை ஏற்றார், உதவி ஆசிரியராகி பின்னர் பயிற்றப்பட்ட ஆசிரியராக பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் கணித ஆசிரியராக 1977—1978-ம் ஆண்டுகளில் கற்று வெளியேறினார்.

கணித ஆசிரியராக வெளியேறிய அமரர் 1979—1985 வரை நீர்கொழும்பிலுள்ள மினுவாங்கொடைப் றோ. க. த. பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலையிலும் விஜயரத்தின மகாவித்தியாலயத்திலும் ஆசிரிய ரானார்.

இல்லறமெனும் நல்லறத்தை இனிதே நடாத்த எண்ணி மானிப்பாயில் சிறப்புற்று விளங்கிய மகாலிங்கம் பொற்கொடி தம்பதிகளின் அருந்தவப் புதல்வி மகாமதியை இருபத்தெட்டா வது வயதில் திருக்கரம பற்றினார். மகாமதிக்கு திருமகள் என்ற சகோதரி ஒருவர் இருக்கின்றார். ''பெறுமவற்றுள் யாம் அறிவ தில்லை. அறிவறிந்த மக்கள் பேறு'' என்ற திருக்குறளுக்கேற்ப அவர் பிள்ளைச்செல்வங்களாக நிறோஜா, தவபாலன், முரளி தரன், தர்சன் ஆகியோர் பிறந்தனர். தன் பிள்ளைகளை கல்விச் செல்வத்தில் திறமையுறச் செய்தார்.

நீர்கொழும்பிலிருந்து வந்த அமரர் 1985-ம் ஆண்டு மானிப் பாய் இந்துக்கல்லூரியில் தன் சேவையை ஆரம்பித்து அமர ராகும்வரை அங்கு கணித ஆசிரியராக விளங்கினார்.

செய்யும் தொழிலைத் தெய்வமாகவும், அகன் திறமையைச் செல்வமாகவும், கொண்ட கடமையைப் பணியாகவும் மதித் தார் இதன் காரணமாக அவர் எப்போதும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டார்.

அதிபர், ஆசிரியர், மாணவரிடையே அவர் நல்லவராக மட்டுமல்ல வல்லவராகவும், பண்பாளராகவும் கணிக்கப்பட் டார்.

கல்லூரி என்ற குடும்பம், தன் வாழ்வியல் குடும்பம், அயல வர், நண்பர்களென்ற குடும்பம் என அவர் எல்லோருக் கும் நல்லவராய் வாழ்ந்து தான் வாழ்ந்த கிராமத்திற்கே பெருமை தேடித் தந்தார்.

இவரது அருமை மாமனார் மகாலிங்கம் அவர்கள் 1980-ம் ஆண்டு இறைவனடி சேர்த்த பின்னர் மானிப்பாய் வடக்கு ஆனந்தன் வயிரவர் பரம்பரை வழி வந்த தர்மகர்த்தாவாக விளங்கினார். அவர் காலத்தில் இவ் ஆலயம் புதுப்பொலிவு பெற்றதுடன் திருவிழாக்களும், பூசைகளும் சிறப்புற்றேங்கின.

உத்தம வாழ்வால் உடல் துறத்திடினும் நித்தியம் புகழாய் நீணிலந்தன்னில் வாழ்வோர் வரிசையில் அமரர் கனகராசாவும் வைத்தெண்ணப்படவேண்டியவர். அமரர் ஆன்மா ஆண்டவன் அடியினை மன்னிலே நிலைக்க வணங்குவம் யாமே!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பார்வையில் அமரர் கனகராசா

எமது கல்லூரியில் 13 ஆண்டுகளுக்கு மேலாக முழுநிறைவோடு கணித பாடத்தை கற்பித்து வந்தவர் அமரர். ''சொற்களைவிட செயல்களேமேலானது'' என்ற வசனத்துக்கு இலக்கணமான வாழ்க்கை அவருடையது. தனது கற்பித்தற் கருமத்தால் பள்ளி மாணவரின் இதயங்களிலே நிறைந்து வாழ்ந்தவர். அவரது திடீர் மறைவு மாணவரது நெஞ்சங்களில் பெரும் அதிர்ச்சியை தந்தது. தான் பணிபுரிந்துவந்த கல்விக்கூடத்திற்கு விசுவாசமாக உழைத்து, அதன் செயற்திறனுக்கு பக்கபலமாகத் திகழ்ந்தவர். எல்லாவற்றிற்கும் மேலாக தனது குடும்பப் பொறுப்பை நிறைவேற்றும் ஆவலாய் தன்னிடத்துண்டான நோயைக்கூட பெரிதுபடுத்தாது கடமைப் பொறுப்பினை நிறைவேற்றி மறைந்துள்ளார். கடமையே கண்ணான இவரது ஆத்மா தூய்மையானது. இதனால் இவர் பூதவுடல் மறைந்திருக்கிறது. ஆனால் இவரது சிந்தனை, செயல் யாவும மறைந்துவிட முடியாதளவு நிறைந்திருக்கிறது இதனால் இவரது குடும்பத்தவர், உற்றார், உறுநண்பர்கள் கலங்காது இவரை நினைப்பதால் இவரது ஆத்ம நற்பேறுக்கு உயருகிறது. சுயநலம் இல்லாத பணி தெய்வத்திற்கு மகிழ்ச்சி தருகிறது ஆகவே யாவும் தெய்வ சித்தமே என்று யாவரும் சாந்தி பெறுவோமாக.

குமாரசாமி சண்முகநாதன்
அதிபர்
மானிப்பாய் இந்துக்கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. தம்பிப்பிள்ளை கனகராஜா

திரு. தம்பிப்பிள்ளை கனகராஜா அவர்கள் 19-2-98 அன்று சிவபதம் எய்திவிட்டார் என்று கேள்விப்பட்டது பேரதிர்ச்சி அடைந்துள்ளேன். 18-2-98 அன்று மதிய வேளை இவரை யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் சந்தித்தேன் அந்த நேரம் இப்படி ஒரு செய்தி வரும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இவர் குணமடைவார் என எதிர் பார்த்தேன். ஏதோ நடந்தது நடந்து முடிந்து விட்டது.

இவர் ஆசிரியராக பல இடங்களில் 25 வருடத்திற்கு மேல் சேவையாற்றி உள்ளார் இவர் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் தொடர்ச்சியாக 10 வருடங்களுக்கு மேல் கடமை புரிந்துள்ளார். இவர் ஒரு சிறந்த கணித ஆசிரியர். மென்மையான சுபாவமுடையவர். எவருடனும் அன்பாக பழகுபவர் மாணவர்களின் முன்னேற்றத்தில் அக்கறை உடையவர் மாணவர்களோடு அன்பாக பழகினாலும் கண்டிப்பாக நடந்து கொள்வார். இவர் பாடசாலைக்கு மிகவும் அமைதியாக வந்து போறவர். சக ஆசிரியர்களின் மதிப்பைப் பெற்றவர். அண்மையில் ஆசிரிய கழக செயலாளராக தேர்ந்து எடுக்கப்பட்டவர். அவர் தனது முதலாவது கடமையாக எனது சேவை நலம் பாராட்டு விழாவை மிகவும் சிறப்பாக நடத்தி முடித்தவர். இவருடைய மறைவை சீரணிக்க முடியாத நிலையில் ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்றால் இவரது குடும்பம் என்ன பாடுபட்டிருக்கும்.

இவர் மானிப்பாய் கிழக்கில் இருக்கும் ஆலயத்தின் முகாமையாளர் ஆவர். அவர் ஆலயத்தை சிறப்பாக நிர்வகித்தவர். ஆலயப் பிரச்சினைகள் பற்றி என்னுடன் கலந்து ஆலோசிப்பவர்.

இவருடைய மனைவி பிள்ளைகள் மனந்தேறி குடும்பத்தை செவ்வன நடாத்த எல்லாம் வல்ல விநாயக பெருமான் அருள் புரிவாராக இவருடைய நெருங்கிய உறவினர்கள் மனச்சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறேன்

இவருடைய ஆன்மா சாந்தியடைய இறைவனை இரஞ்சுகிறேன்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

செ. கேசவராஜன்
முந்நாள் அதிபர்
மானிப்பாய் இந்துக் கல்லூரி
மானிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிப்பாய் வடகிழக்கு ஆனந்தன் வைரவர்

# ஆலய குருக்களின் அனுதாபம்

நல்லவன் ஒருவன் உலகைத் திருத்துவான். கூடாதவனை உலகம் திருத்தும் என்பது ஒரு தத்துவ வாக்கு அத்தத்துவ வாக்குக்கு அமைய ஒரு நல்லவனாக வல்லவனாக சிறந்த ஆசானாக திரு. த. கனகராசா விளங்கினார்.

ஆனந்தன் வைரவர் ஆலயத்தில் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக நான் குருக்களாக இருக்கிறேன். நான் இப்பணியை செய்வதற்கு இவரது ஆலோசனையும் நன்கு திட்டமிட்டு ஆலய கருமங்களை நடாத்துவதற்கு முழு ஒத்துழைப்பையும் முழு மனதுடன் வழங்கினார் இவர் தர்மகர்த்தா ஆக இருந்த காலத்தில் வைரவப் பெருமானது நித்திய பூசை இரு நேரம் காலமும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டது.

1989ம் ஆண்டு வைரவப் பெருமானுக்கு பாலஸ்தானம் செய்து திருத்த வேலைகள் செய்யப்பட்டது. அக்காலத்தில் அபிஷேக மண்டபம், பலிபீட மண்டபம், வசந்த மண்டபம் என்பன கட்டப்பட்டன.

விழா உற்சவங்களை பொறுத்த வரையில் விஷேட தினங்களான தைப்பூசம், பங்குனி உத்தரம், சித்திரை வருடப்பிறப்பு, ஆனி உத்தரம், கார்த்திகை விளக்கீடு என்பன சிறப்பாக நடாத்த ஏற்பாடு செய்தார். இவ் உற்சவங்கள் தொடர்ந்தும் நடைபெறும். அன்னாரது பணி தொடர்ந்து நடைபெற அவர் வழி கோலியுள்ளார்.

இவரது மரணச் செய்தி கேள்விப்பட்டதும் அதிர்ச்சியும் துயரமும் அடைந்தேன். இவரது இழப்பு ஈடுசெய்யமுடியாதது. இவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றேன். இவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆனந்தன் வைரவப் பெருமானை வேண்டிக்கொள்கின்றேன்.

இவ்வண்ணம்
ஆனந்தன் வைரவர் ஆலய பிரதம குரு
சிவஸ்ரீ கா. இராஜேஸ்வரக் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிப்பாய் வடகிழக்கு

# ஸ்ரீ பாரதி சனசமூக நிலையம்

''நெருனல் உளனொருவன் இன்றில்லை என்றும்
பெருமையுடையத் திவ்வுலகு''

என்பது தேவர் குறள். நேற்றிருந்தவன் இன்று சிவனாயினான் என்பது சாவைத் தழுவும் அனைவர்க்கும் பொருத்தமானது. ஆனால் இக்குறளில் வரும் உளன் என்றால் மூன்றெழுத்துச் சொல் ஒரு மந்திரமாக சிந்திக்க வைக்கிறது. சுக பெலமாக உளன் — அறிவாற்றல் பொருந்தியவனாக உளன் தலைமைப் பண்பு படைத்தவனாக உளன்—இன்னும் என்ன என்ன எல்லாம் வேண்டுமோ அவை எல்லாம் உளன் என விபரிக்க நிற்கின்றது. இத் தகைய பண்புடையவரது இறப்பினால் பெருமை உடை து இவ் வுலகு ஏனெனில் இத்தகைய பெருமக்களை வெளிச்ச த்துக்கு இட்டுச்சென்று பெருமைபெற்றது இவ்வுலகு.

இத்தகையவற்றிற்கு இலக்கணமாக திகழ்ந்த தனது கிராமத் தின் வளர்ச்சியில் கவனம் செலுத்தி பல்வேறு துறைகளிலும் பங்களிப்பை வழங்கிய ஒரு உன்னத ஸ்தானத்தை அடைந்தவர் அமரர் தம்பிப்பிள்ளை கனகராஜா ஆவர். அன்னார் காலமாகி விட்டார் என்ற செய்தி எட்டியதும் அதிர்ச்சியும் நம்ப முடியா மலும் இருந்தது.

அன்னார் எமது ஸ்ரீபாரதி சனசமூக நிலையத்தின் செய லாளராக எனது தலைமையின்கீழ் செயலாற்றினார். என்னையும் மற்றவர்களையும் ஊக்கமும் உற்சாகமும் கொடுத்து நிலையத் தின் வளர்ச்சிக்கு அல்லும் பகலும் பாடுபட்டு உழைத்த பெரு மையை உடையவர்.

என்றுமே ''அன்புடனும் அமைதியுடனும் பழகும் சுபாவ முடைய'' இவர் பொதுத்தொண்டில் எவர் ஈடுபட்டாலும் அதனைப் பாராட்டி ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து தாமும் ஒருவராக நின்று நல்ல பணி செய்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிப்பாய் வடகிழக்கு ஆனந்தன் வைரவர் ஆலய த[illegible] கர்த்தாவாக இருந்து தன்னையே வைரவர்க்கு அர்ப்பணித்த[illegible]

மானிப்பாய் இந்துத்தாயின் புகழ் பூத்த கணித ஆசிரியர்களில் ஒருவராக பதின்மூன்று ஆண்டுகள் தவழ்ந்தவர். அண்மையில் தனது வெள்ளிவிழாவை கல்விச்சேவையில் கண்டவர். பல மாணவர்கள் கணிதத்துறையில் புலமைபெற காரணகர்த்தாவாக இருந்தவர்.

இவ்வாறு பல நற்பணி புரிந்து வந்த அமரர் கனகராஜா இன்னும் சில காலம் வாழ்ந்திருந்தால் இறைபணியும் பொதுப்பணிகளும் சிறப்படைந்திருக்கும் என்றால் மிகை யாகாது.

அவர் செய்த நற்பணிகள் என்றுமே அவரை நினைவு கூற வைக்கும் என்று ஆறுதலைந்து அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்
சின்னத்தம்பி முருகையா
முன்னைநாள் தலைவர்
ஸ்ரீபாரதி சனசமூக நிலையம்
மானிப்பாய் வடகிழக்கு
மானிப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-

# நல்லதொரு நண்பர்

மானிப்பதியின் வடகிழக்குப் பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் தம்பிப்பிள்ளை கனகராஜாவின் திடீர் மறைவு என்னை ஆறாத்துயரத்தில் ஆழ்த்தியது.

''கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக'' என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க வாழ்ந்து காட்டியவர் அமரர்.

கல்வியிற் சிறந்த ஆசானாக, அதிலும் விசேடமாக கணிதத் துறையில் பயிற்றப்பட்டு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் கணித ஆசானாக கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் சேவையாற்றி வருடாவருடம் பல மாணாக்களை கணித பாடத்தில் உயர் வடையச் செய்த பெருமைமிக்கவர். சிறந்த ஒழுக்க சீலரான இவர் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் கல்வி கற்ற காலம் தொட்டு அமரராகும்வரை சிறந்த நண்பராக என்னுடன் பழகியவர் பழகுவதற்கு இனிமையான சுபாவம் கொண்டவர். இவர் வாழ்ந்தபகுதியில் கிராமசேவையாளராக நான் கடமையாற்றியபொழுது

''உடுக்கை இழந்தவன் கைபோல இடுக்கண்
களைவதாம் நட்பு''

என்ற குறள் வழிக்கமைய பல வழிகளிலும் உதவி செய்து நிர் வாகத்தை திறம்பட ஆற்ற கை கொடுத்தவர் என்பதை என்றும் என்னால் மறக்க முடியாது.

இறைபக்தியிலும் மிகுந்த ஈடுபாடு கொண்ட அமரர் கனக ராசா அவர் ஊரின் பிரசித்தி பெற்ற ஆனந்த வயிரவ கோயிலின் வளர்ச்சிக்காகவும் அப்பதிவாழ் மக்களின் ஆன்ம ஈடேத்துக்காக வும் அரும்பாடுபட்டு உழைத்தவர் என்பதை யாரும் மறுக்க இயலாது. பெருமைமிக்க ஆசானாகவும் பாசம் மிகுந்த தந்தை யாகவும், நல்ல நண்பனாகவும் வாழ்ந்து பெருமை தேடி நிலை யற்ற இவ்வுலக வாழ்வைவிட்டு இறைபதம் எய்திய அமரர் கனக ராஜாவின் ஆன்மா சாந்தியடைய எம்பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

இராசவல்லவன் இராசயோகன்
நண்பன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மைப் பிரிந்த சகோதரன்

மதிப்புமிக்க மானியூரில் மாண்புடன் வாழ்ந்த அமரர் த கனகராஜா எம் மானிப்பாய் இந்துக் குடும்பத்தில் வாழ்ந்த. வளர்ந்த ஓர் செல்வப் புதல்வன். பத்து ஆண்டுகளுக்கு மேல் எம் முடன் இணைந்து கல்லூரியின் வளர்ச்சிக்காக உழைத்த தியாகி. அமைதி, அடக்கம், அன்பு, ஆளுமை மிக்க ஆசிரியன். வகுப்பறை யிலு பாடசாலைக் கடமைகளிலும் ஓர் கடமை வீரன்.

''கடமையைச் செய் பலனை எதிர்பாராதே''

என்ற கீதையின் பொன்மொழியைக் கடைப்பிடித்த கர்ம யோகி. நடந்தாலும் புல் சாகாத ஒரு பசு. கனிவான வார்த்தை களைப் புன்னகை தவழப் பேசும் அன்பன். எமது ஆசிரியக் கழ கத்தின் செயலாளர் பதவியை ஏற்கத் தயங்கியபோது ''கனக ராஜா நீரே அப்பதவியை ஏற்றுக்கொள்ளும்'' என்ற எனது அன்புக் கட்டளையைத் தலைசாய்த்து ஏற்ற ஓர் பாசமிகு தம்பி. கணிதத்துறையைக் கண்ணியமாக வளர்த்தெடுத்த உத்தமன்.

இத்தகைய ஓர் சகோதரனை மின்னாமல் முழங்காமல் இறைவன் எடுத்ததன் மர்மமென்ன என்று அதிபரும், ஆசிரியர் குழாமும், மாணவரும் இன்னும் மயங்கி நிற்கிறோம். ஆனால் எல் லாம் இறைசித்தம். காலம்தான் விடை தரும் இந்த அன்புப் பெட் டகத்தை இழந்து வாழும் அவரது அன்பு மனைவியாருக்கும், தங் கக் குழந்தைகளுக்கும், பாசமிகு தந்தை, சகோதரர்களுக்கும் ஆசிரியர் சார்பில் எம் அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி
ஆசிரிய கழக சார்பில்
திருமதி கி. பவசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்பத் தலைவனின் இறுதிக் கிரியையின்போது நேரில் வந்து ஆறுதல் கூறியோருக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும், அவர் நோயுற்றபோது அவரை வைத்தியசாலையில் கவனித்த வைத்தியகலாநிதி, உதவியாளர்களுக்கும், அவரை அன்போடு பார்த்து ஆறுதல் கூறிய ஆசிரியர், மாணவர்களுக்கும், இறுதி யாத்திரையை சிறப்புற நடாத்திய மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவர்களுக்கும், வீட்டுக் கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்

''திருத்தணிகை''
மானிப்பாய் வடகிழக்கு
மானிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் த. கனகராசா

மானிப்பாய் இந்துவின் மாணவர்களின் நீங்கா நினைவில் இருப்பிடம் பெற்ற ஆசிரியப் பெருந்தகை

வாழ்வாங்கு வாழ்பவர்கள் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவார் என வள்ளுவம் கூறும். அமரர். திரு. த. கனகராஜா அவர்களின் கல்வி, சமயப்பண்பு போற்றும் மாண்பிடத்தை மதித்து வாழ்ந்த எளிமையான பண்பாளர் இந்துக்கல்லூரி ஆசிரியசேவையில் வெள்ளிவிழாக் கண்ட ஆசிரிய மணிகளில் ஒருவர் ஆவார். ஒரு மாணவனை வினைதிறன், விழிப்புணர்வு, ஒத்துழைப்பு, சமூகப்புரிந்துணர்வு ஆகியவற்றிற்கு உட்படுத்துவதே ஒரு ஆசிரியரின் பொறுப்பு என உணர்ந்து முழு ஆளுமை வளர்ச்சியினை மாணவனிடத்தே ஏற்படுத்துவதே தன் பணி என செயல்பட்டார் ஒரு ஆசிரியனுடைய வாழ்வு மாணவரின் உள்ளங்களில் வாழ்கின்றதேயன்றி அச்சாளனுடைய எழுத்துக்களில் அல்ல'' என்ற வாக்குக்கேற்ப, தனது மாணவர்களுக்கு கணிதத்தை சிறப்புற கடந்த இருபத்து ஐந்து ஆண்டுகாலமாக கற்பித்து ஆயிரக்கணக்கான மாணவச்செல்வங்களைக் கல்வி அறிவுள்ள நல்ல தங்கமாக ஆக்கித்தந்தார் அவருடைய திடீர் மறைவு இந்துமாணவர்களின் மனதில் அதிர்ச்சியும் கவலையும் ஏற்படுத்தி விட்டதனை காணக்கூடியதாக இருக்கிறது.

ஒரு ஆசிரியனிடம் காணப்படவேண்டிய கல்வி, திறமை நன்னடத்தை, ஊக்கம், ஒழுங்குமுறை அத்தனையும் ஒருங்கிணைய பெற்ற ஆசிரியர், கனகராஜா அவர்கள் இப்படி ஆன நிறைவு பெற்றமனிதன் இன்னும்பல காலம் வாழ அன்னாரின் குடும்பம் கொடுத்துவைக்கவில்லை அவரது மரணத்தால் மனம் வெதும்பி, வாடும் அவரது மனைவி, மக்கள். யாவர்க்கும் எனது அனுதாபங்கள்.

அவரின் ஆத்மா சாந்தியடைய இறைஞ்சுகின்றேன்

த. விவேகானந்தராஜா
செயலாளர், மானிப்பாய் இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம்,
பெற்றோர் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்செல்வி அச்சகம்,
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org